செ. கு. எண்: 282 நாள் :18.10.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 18.10.2013

விழுப்புரம் மாவட்டம், பாப்பனப்பட்டு கிராமம், சாமியாடி குச்சிப்பாளையம் பாட்டை அருகே 4.9.2013 அன்று கண்டெய்னர் லாரி மீது அரசுப் பேருந்து மோதியதில் பேருந்து நடத்துநர் திரு. மணி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஜி.எஸ்.டி. சாலையில், லாரி மீது 6.9.2013 அன்று அரசுப் பேருந்து மோதியதில், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரத்தைச் சேர்ந்த பேருந்து ஓட்டுநர் திரு. நாகராஜ் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்த பேருந்து நடத்துநர் மணி, ஓட்டுநர் நாகராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த பேருந்து நடத்துநர் மணி மற்றும் ஓட்டுநர் நாகராஜ் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9